# அம்பாறை மாவட்ட கரையோர மீன்பிடிக் கைத்தொழிலும் அதன் நிலையான அபிவிருத்தியும்

**S. Rafeeka**

*Senior Lecturer in Geography*
*Department of Geography, South Eastern University oof Sri Lanka*

***பிரதான சொற்கள்:*** *கரையோரமீன்பிடி, நிலைத்திருக்கும், வாழ்வாதாரம்*

**அறிமுகம்**

அம்பாறை மாவட்டம் வடக்கே பொலநறுவை, மட்டக்களப்பு மாவட்டங்களையும் மேற்கே பதுளை, மொனறாகலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களையும் தெற்கே ஹம்பாந்தோட்டை மாவட்டத்தையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் 651,512 பேர் வசிக்கின்றனர் *(புள்ளிவிபரத் தகவல் திரட்டு, 2010)*. இதில் சுமார் 85,780 பேர் மீனவக் குழுமத்தினைச் சார்ந்தவர்களாவர் *(யேசுயு 2008)*. இங்கு கவனத்திற்கொள்ளப்படும் கரையோர மீன்பிடி என்பது கரையிலிருந்து 40 மஅ தூரம் வரையிலான கடல் பிராந்தியத்தினுள்ளும் உவர் நீரேரிப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் மீன்பிடிக் கைத்தொழிலினைக் குறிக்கும்.

இவ்வாய்வு அம்பாறை மாவட்டத்தின் தென்கிழக்குகரையில் அமைந்துள்ள பிரதேசங்களின் கரையோர மீன்பிடித் தொழிலினை மையப்படுத்தியாக மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்படி கல்முனை (தமிழ்ப்பிரிவு), கல்முனை ((முஸ்லிம் பிரிவு), சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், உல்லை, பாணம ஆகிய 12 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக ஆய்வுப்பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாவன: அம்பாறை மாவட்ட கரையோர மீனவத் தொழிலாளர்களின் வருமானக் குறைவிற்கான ஏதுக்களைக் கண்டறிந்து, அவற்றுக்கான மேம்பாட்டு வழிமுறைகளை முன்வைத்தலும் ஆய்வுப் பிரதேசத்தில் முறைசாரா மீன்பிடியினால் ஏற்படும் மீன்வளச் சுரண்டலை இனங்கண்டு, அவற்றுக்கான மாற்று மேம்பாட்டுத் திட்டங்களைப் பரிந்துரைத்தலுமாகும். மேலும் மரபுசார்ந்த மீன்பிடி முறைகளுக்கு மாற்றீடாக, நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தும் மீன்பிடி முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான முகாமைத்துவ திட்டங்களையும் இவ்வாய்வு கண்டறிவதனை நோக்காகக் கொண்டுள்ளது.

**ஆய்வுமுறையியல்**

இவ்வாய்விற்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. தரவுகள் பண்புசார் மற்றும் அளவுசார் முறைகளினூடாகப் பெறப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையின் வழியமைந்த ளுீளுளு மென்பொருளினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகள் தொகுத்தறி முறையினைப் பிரதானமாகவும் உய்த்தறி முறையினை துணையாகவும் கொண்டு பெறப்பட்டுள்ளது.

ஆய்வுக்கான முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்டுள்ளன. இதன்படி ஆய்வுப் பிரதேசத்தின் ஆறு மீனவக் கிராமங்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை கல்முனைத் தமிழ் பிரிவு, கல்முனை முஸ்லிம் பிரிவு, அட்டாளைச்சேனை, திருக்கோவில், பாணம, உல்லை ஆகியனவாகும். இக்கிராமங்களில் மொத்தம் 7973 மீன்பிடிக் குடும்பங்கள் உள்ளன. இவற்றுள் கல்முனைத் தமிழ் பிரிவில் 1087 மீனவக் குடும்பங்களும் கல்முனை முஸ்லிம் பிரிவில் 2200 மீனவக் குடும்பங்களும் அட்டாளைச்சேனை மீனவக் கிராமத்தில் 2653 மீனவக் குடும்பங்களும் திருக்கோவில் மீனவக் கிராமத்தில் 1582 மீனவக் குடும்பங்களும் பாணமவில் 360 மீனவக் குடும்பங்களும் உல்லையில் 91 மீனவக் குடும்பங்களும் படையாக்க மாதிரி முறையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி 400 வினாக்கொத்துக்கள், விகிதாசார படையாக்க முறையில், தெரிவு செய்யப்பட்ட 06 மீனவக் கிராமங்களிலுமுள்ள மீனவக் குடும்பங்களிடம் வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. ஆய்விற்கான இரண்டாம் நிலைத்

தரவுகள் பிரதேசசெயலாளர் அறிக்கைகள் (மூலவளத் திரட்டு), மாவட்ட செயலக அறிக்கைகள், மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க அறிக்கைகள், மீன்பிடி விரிவாக்கற் காரியாலய அறிக்கைகள் , இணையத்தளக் குறிப்புக்கள், மத்திய வங்கி அறிக்கைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

ஆய்வுப் பிரதேசத்தில் 258 மீனவக் கிராமங்களும் 18,450 மீனவக் குடும்பங்களும் 21,740 மீனவத் தொழிலாளர்களும் வாழ்ந்து வருகின்றனர் (2008). 2000ஆம் ஆண்டு 9,210 மெற்றிக் தொன் மின் உற்பத்தி இடம்பெற்ற போதும் 2008 ஆம் ஆண்டு அது 16,260 மெற்றிக் தொன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்தகால யுத்த சூழ்நிலைக்கும் சுனாமிக்கும் பின்னர் மீனவர் சனத்தொகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் இப்பிரதேசத்தின் மீன்பிடிக் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்கதான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதை தரவுகள் குறிப்பிடுகின்றன. அதாவது 2003 ஆம் ஆண்டு 15,150 மீனவக் குடும்பமும் 15,500 செயற்பாட்டு மீனவர்களும் காணப்பட்டபோதும் 2008 ஆம் ஆண்டு மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை 18,450 ஆகவும் செயற்பாட்டு மீனவர்த்தொகை 21,740 ஆகவும் அதிகரித்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டுச் சுனாமி அனர்த்தத்தினால் 908 மீனவர்கள் உயிரிழந்ததோடு 11,285 மீனவர்கள் இடம்பெயர்ந்தனர். 2,148 மீனவக் குடியிருப்பு முற்றாக அழிக்கப்பட்டதோடு 1378 வீடுகள் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டன. இன்னும் 1,754 மீனவப்படகுகள் பாதிப்படைந்ததோடு 2,592 படகுகள் முற்றாக அழிவுக்குள்ளாக்கப்பட்டன. 1998 ஆம் ஆண்டு ஒருநாளைக்கு 15 மெற்றிக் தொன் மீன் உற்பத்தி செய்யப்பட்டது 2005 ஆம் ஆண்டு 5 மெற்றிக் தொன்னாக அது குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்னும் குளிரூட்டும் நிலையங்கள் கல்முனை மீனவமாவட்டத்தில் 1998 ஆம் ஆண்டு 02 ஆகக் காணப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஒன்றாகக் குறைவடைந்துள்ளது *(ஆயடனநலைலயஇ 2006).* அத்தோடு அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மீனவர்களுக்கு உதவியபோதிலும் ஆர்வமின்மையால் அம்பாறைமாவட்ட கரையோர மீன்பிடித் தொழிலில் பேண்தகு மேம்பாட்டை காணமுடியவில்லை. இன்னும் மீன்பிடித் துறையில் ஒரு சிறந்த முகாமைத்துவமின்மையினால், அங்கு வாழும் மீனவர்களால் போதியளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிவதில்லை. இப்பிரதேச மீன்பிடித் துறையில் நவீன மீன்பிடி உபகரணங்களோ வேறு நவீன தொழில் நுட்பமோ குறைந்தளவில் பயன்படுத்தப் படுகின்றமையால் இப்பிரதேச மீன் வளம் சுரண்டலுக்கு உட்படுகின்றது. ஆய்வுப் பிரதேத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் கரையோர மீன்பிடியையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பினும் அதனை விருத்தி செய்வதற்கான தொழிநுட்பவியல் மற்றங்களை அறிந்திருப்பது மிகக் குறைந்தளவிளையே காணப்படுகின்றது. அதன் காரணமாக இப்பிரதேச மீன்பிடியில் ஈடுபடும் குடும்பங்கள் வறுமைக்குட்பட்டவர்களாகக் காணப்படுவதால் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி மந்தநிலையிலையே காணப்படுகின்றது.

எனவே இப்பிரதேச மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு சிறந்த தொழிநுட்பப் பயிற்சியை வழங்குவதனூடாகவும் நவீன மீன்பிடி முறைகளினை விருத்திசெய்வதனூடாகவும் மானிய அடிப்படையிலான மீனவக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தி அவர்களது வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும் என இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

## References


Hersoug, B. and Munkejord, S. 2003. Assessment of Potential Areas for Development Cooperation between Norway and Sri Lanka within the Fisheries Sector and Outlining a Project Programme. Report Commissioned by NORAMB, Colombo, 25 May to 7 June 2003, 39 pp.

Maldeniya, R. and Jayamanne, S.C. 2006. A Rapid Assessment of the Status of the Fisheries in Tsunami Affected Areas of Sri Lanka. FAO (OSRO/RAS/504/LAO)/ National Aquatic Resources, Research and Development Agency (NARA). 66 pp.

NARA 2008. Fisheries Year Book

திட்டமிடற் பிரிவு, 2010, புள்ளிவிபரத் தகவல் திரட்டு, மாவட்ட செயலகம், அம்பாரை.